கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்த வல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேதவல்லி விசாலட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நாம் அமைத்தோம் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் எம்மை நீயே. (கற்பூர)

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் புறம்இருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
கார்இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமைச் சிறியோரை நீ ஆதரி. (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவோம் தாயே எம்தன்
அன்னை அவள் நீ இருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவரின் குரல்கேட்டு உன்முகம் திருப்பு
சிரித்தபடி எம்மைத் தினம்வழி அனுப்பு (கற்பூர)

கண்இரண்டும் உன்உருவே காணவேண்டும்
கால்இரண்டும் உன் அடியே நாடவேண்டும்
பண்அமைக்கும் நா உனையே பாடவேண்டம்
பக்தியோடு கைஉனையே கூடவேண்டும்
எண்ணம் எல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆகவேண்டும்
மண் அளக்கும் சமயபுர மாரி அம்மா
மக்களது குறைகளையும் தீரும் அம்மா. (கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழ வேண்டும்
சுற்றம் எல்லாம் நீடூழி வாழ வேண்டும்
சோதியிலே நீஇருந்து ஆள வேண்டும்
மற்றதெல்லாம் நாம் உனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளை எம்மைத் தள்ளலாமா? (கற்பூர)